36

உ

சிவமயம்

திருவண்ணாமலை

ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

நவகாரிகைமாலை.

அருணாசலேசர்வருகைப்பதிகம்

உண்ணாமுலையம்மன் வருகைப்பதிகம்

அருணாசலேசர்பதிகம்

உண்ணாமுலையம்மன்பதிகம்

இவையைந்தும் அடங்கியிருக்கின்றது.

[illegible]ம். து.

பிலே-மாணிக்கவேலு முதலியாரால்.

தமது

வித்வசிரோன்மணி விலாசம் பிரசில்

பதிப்பிக்கப்பட்டது.

நெ,170-தங்கசாலை தெரு-சென்னை.

விலை] 1919. [அணா-1.

9 DEC 1919
MAHAL LIBRARY
அன்னார் கி. அருணாசல முதலியார் அவர்களின் அன்புப் பணிக்கு அருணாசலம் அவர்களின் அருட்கொடை திருமதி (1986)

உ

சிவமயம்.

திருவண்ணாமலை

ஸ்ரீ அருணாசலேசர்

நவகாரிகைமாலை.

காப்புநேரிசைவெண்பா.

சொற்பவளமேனியனை தும்பிமுகத்தை தங்கரத்தி
யற்பினெடு வேண்ட வமையுமா-வற்பு
தவகாரிகைமாலைத் தாமியருணேசர்
நவகாரிகைமாலை நன்று.

கட்டளைக்கலித்துறை,

பாரார்தருநகம் மருணாசலலேசர் பதாம்புயத்தை
பூரார்கினைந்துகடைதேறுந் தன்மையை யோர்ந்தி
மாராய்ந்தறிந்தவ் வழியினிலாத வகடனொரு
தேராய்ச்சமைந்திலனே யருணைபுரித்தேவருக்கே.
தனமாதர் தங்களுக்கேயிதன் சொல்லிச் சலிததிடுபெ
மனமாசுதீர்க்கும்வகையருள்வாயடி வாழ்த்துமன்பா
இனமானவர்புடை சூழ்ந்தரளேறி யிவர்தமவா
கனமாச்சமைத்திலனே யருணைபுரிகர்த்தருக்கே (உ)
கோளானவைபல கற்றேறவயிற்றின் கொடுமையினல்
பாளாவலைந்துலைந்தே னவரோதிடுப் வாசனத்தை தத்

தோளார்சுமந்தவனூர்ந்திடுந்தேரினைதொட்டிழுக்கு
மாளாய்ப்பிறந்திலனே யருணாபுரி யத்தருக்கே. (௩)

தடமானதீதென் றறியாக்குருடரின் தன்மை யைப்
போல், மடமாதர்மோக வலையினிற்பட்டு மயங்குகின்
றேன், திடமாகப்பூசுரர் நாடோறுமாட்டுந் திருமஞ்ச
னக், குடமாய்ச்சமைந்திலனேயருணாபுரிகோயிலுக்கே.

வடியாருங்வேற்கணியுண்ணாமுலைக்குமணாளவென்றே
படியாரைக்கண்டு நற்றோரஞ்சொல்லியலரடியை
முடியாரவைக்குமுறையறியாப்பெருமூடனொரு
படியாய்ச்சமைந்திலனே யருணாபுரிப்பாதையிலே ( )

கோடானுகோடி பவமேபுரிந்திட்ட கொள்கையினால்
நாடார்நலக்க வுடம்பெடுத்தேனிந்த நானிலத்தில்
கூடாதபாவி யினியேவன்செய்குவன் கோயிற்பசு
வாய்ப்பிறந்திலனே யருணாபுரிமங்கையிலே. (௬)

லாதகாயம்நிலையாதுவாழ்வினைநிச்சயமே
பல்லாதபுத்தியையேன் படைத்தாய்புரமூன்றெரித்
லாயின்கோயிற்பசுமாடுகள்வயிறாரவுண்ணப்
புல்லாய்ச்சமைந்திலனே யருணாபுரிபூமியிலே, (௭)

சனியானபாவியிளமையிலேயெனைத்தான்பிடித்தே
யனியாயங்கண்டதையார்க்குரைப்பேனையன்மால்வண
பனிமாமலைமகள் பாகனுக்கன்பர்பரிந்தருந்துங் (நுங்கும்
கனியாய்ச்சமைந்திலனே யருணாபுரிக்காவகத்தே (௮)

ஈயாப்பெரும்புல்லர்க்கேயிதஞ்சொல்லி யிரந்துழல்வேன், மாயாப்பிறவியறுக்குஞ்சிவபெருமான்பதமென், றோயாமற்பூசைசெய் அண்ணலன்பர் சேடத்தையுண்ணுமொரு, நாயாய்பிறந்திலனே யருணாபுரிநாட்டினிலே.

ஸ்ரீ அருணாசலேசர்நவகாரிகைமாலை-முற்றிற்று.

திருவண்ணாமலை

அருணாசலேசர் வருகைப்பதிகம்.

காப்பு-வெண்பா.

அருணாசலஞ்செய வெழுந்தருளும்சோதி
அருணாசலேச ரடிமேல்-தெருளாத்
துதியுரைக்கநாளுந் துணையாயன்பர்க்குக்
கதியளிக்குந் தும்பிமுகன்காப்பு.

ஆசிரியவிருத்தம்.

நினைவாகிமூலநிலையாகிநேசநிஜரூபமானவடிவே, மனமாயைமூடி யறிவேகலங்கி மனமுந்தியங்கி வெகுவாய் இனமோடிருந்து அவதிமிலைந்து எமதூதரோடிவருமுன், மனவேதநாத அருணாசலேசர்வரவேண்டுமென்றனருகே. ௧

கயிலாயமேரு அதிலாறுவீடுகளைகண்டதில்லையொருவர், வெயிலானசோதி விளையாடும்வீடு வெளிமாயையேதுமறியேன், பயிலானகொம்பின் பகர்காயுமாகிபழ

மாயுதிர்ந்துவிழுமுன், மயிலாடுசோலை அருணாசலே
சர் வரவேண்டுமென்றனருகே. ௨

நதியோடுதும்பை முடிமீதணிந்து நலமான வெள்
ளைவிடைமேல், பதியாயிருந்து உமைபாதிகொண்ட
பரனேயுனைமறவேன், விதிநாதனேவ வெமதூதர்வந்
து வெகுவாதைசெய்துவிடுமுன், மதியேபுனைந்த அ
ருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே. ௩

உற்றாருமில்லை யுறவில்லையாரு முறைசொல்லியொ
ப்பிவரவே. பெற்றாருமில்லை மறைதேடுகின்றபெரியோ
யுனைமறவேன், கற்றாருமேற்றவடியாரருந்து கனியா
யமர்ந்தகனியே, மற்றாருமில்லை அருணாசலேசர் வர
வேண்டு மென்றனருகே, ௪

கொங்கைக்குரும்பை முலைமாதராசை கொடிதான
மோகமதனாற், சங்கற்பமொன்றுமறியாமல்வீணில்சடு
மாறியாவிவிடுமுன், திங்கட்கொழுந்து முடிமீதணிந்
தசிவனேயுனைமறவேன், மங்கைக்கிரங்கும் அருணா
சலேசர் வரவேண்டுமென்றனருகே, ௫

உருவானகாயமதிலாறுவீடு உதிரங்கலந்தவுடலம்,
கருவாகிநின்று புவிமீதில்வந்து கபடேதுமொன்றும
றியேன், குருவாகிநின்ற சிவஞானசோதி குருவேநினை
மறவேன், மருவீசுசோலை அருணாசலேசர்வரவேண்
டுமென்றனருகே, ௬

பணியாதகோயிலணியாதநீறு பசியாதசோறு தருவாய், துணியானவாசிசிவஞானமோன சுகமேயெனக்கருள்செய்வாய், தணியாதகோப மூடலோடிருந்து சலியர்தமாயையைவெளியே, மணியாடுநாதர் அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே, எ

சூதாடிநின்ற சிவசூத்திரங்கள் சுழுனவாயமர்ந்தசுழியே, பாதாதிகேசமுடலோடிருந்து படுகானிலாடு நடனம், வேதாவுமாட மதியாடமூவர் விளையாடிநின்ற வெளியே, வாதாடினின்ற அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே, அ

அடிமூலவட்டமதிலாறுதிட்ட மதின்மேலிருந்தபரனே, துடியானசத்திசிவரூபவல்லி சுகமானவேதவடிவே, அடியாருளத்தில்வெளிவாய்விளங்குமரனேநிறைமறவேன், வடிவானசோதி அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே, கூ

கல்லாலினீழலினல்வர்முன்பு காணுதயோகநிலையைச், சொல்லாதுசொன்ன மெய்ஞ்ஞானமூர்த்தி சுடராயிலங்குமரசே, வல்லாளமன்ன னருமைந்தனுகி வருஞானமானவடிவே, வல்லானுகந்த அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே, ய

உலாதங்கிநின்ற வுயிரெங்குமாகி யுலகெங்குமேகவடிவாய், கலாகண்ட தில்லை வெளிகோடிகாலே கலிகாலமாயையதனல், இலாதேடியாசை பசியால்மெலிந்து

இருகண்டியங்கிவிழுமுன், வனாதங்கினின்ற அருணா
சலேசர் வரவேண்டுமென்றனருகே, ௧௧

அருணாசலேசர்வருகைப்பதிகமுற்றிற்று.

திருவண்ணாமலை

உண்ணாமுலையம்மை வருகைப்பதிகம்.

காப்பு-வெண்பா.

ஓங்குபெருமபாருதவு முண்ணாமுலையனைமேற்
பாங்குபெறுஞ்செந்தமிழிற் பாவுரைக்க-நீங்கரிய
வெந்துயரொலாம்போக்கும் வேழமுகனை செய்யதிருக்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டவாழி மிசைபள்ளிகொண்ட திருமாலு
முண்டகமிடை, யூர்கொண்டநான்கு புகழுயபரந்து
வுட்கொண்டசிந்தையொடுதேடேர்கொண்டவன்னி
மலைநாதர்வாமமிழைகொண்ட மின்னிலிடையாள், வார்
கொண்டவுண்ணாமுலைநாமதேவிவரவேணுமென்றருகே, ௧

நறவாடருப்புவனசமபிறங்கு நனிவாவிசூழுமிளவெ
ண், பிலைநீடுசெஞ்சாடவிகணடரைறு பெருகுஞ்சிற
ந்தவெழிலார், நிறையோடுநின்ற கிரியும்விளங்கநிலைவா
மலைநெடுகோன், மறைதேடுமுண்ணாமுலைநாமதேவி
வரவேணுமென்றனருகே. ௨

கலையாய்மிலைந்த விரிநீருடுத்த கவினார்புவிப்பெண்
ணவிளான், டலையாய்விளங்கி டணவாதிசேட சயனஞ்சி
ரகந்தெணுளிருஞ், சிலையாய்நிவந்த தனிஞானதீபசிகை
கொண்டளாவுநெடிய, மலைமேவுமுண்ணாமுலைநாமதே
விவரவேணு மென்றனருகே. ௩

பொன்னிற்பரந்த புவியிற்பொருந்து புளகுற்றமாத
ர்மயலிற், சென்னிக்கண்வைத்து மருள்வேனைபொய்
யில் நிரிவேனைசற்றுமிளகாக், கொடுனைச்சொலேனை
கொடுமைக்குளேனை குறைதீரவுன்கணருளான், மன்னி
க்குமுண்ணாமுலைநாமதேவி வரவேணுமென்றனருகே.

எந்தாய்விண்ணின்கணிமையோர்பராவு மிமயந்தரும்
பெணுமையென், சிந்தாகுலங்களடியோடகழ்ந்து சித
றும்பழிச்செய்திருவின், பந்தானரும்பியடியே னுளத்
தைப்பருகும் பசுங்கிளியென்முன், வந்தாள்கவுண்ணா
முலைநாமதேவி வரவேணுமென்றனருகே. ௫

சற்றுகிலும்மு ளுடையாவுலுத்தர் சமுகத்திலேகிக
விபா,டித்தாழ்வுறுமலிணையம் புயங்கயெனுநின்சரண
கிண்ணியேன், வித்தாரமான தமிழ்பாடிஞானவிறன்
மேவவைத்திடுதிபால், வற்றுதவுண்ணாமுலைநாமதேவி
வரவேணு மென்றனருகே. ௬

அரானுவினுங்க ணரிமார்பினுஞ்சே வரனூர்மருங்கு
முடலி, னயனாரவிந்த மொருவாயிரங்க ணகுமிந்திர
ன்ற னுழியும், உயுமண்பிலங்கொ ளுயிர்தோறுநின்ற

நுவவே தஜசன்றியுளவோ, மயமா துவுண்ணு முலைநாம
தேவி வரவேணு மென்றனருகே. எ

கருவீடுதேகமதிலாறுவீடு க டவீடுவச்சிநடுவிற்,
பெருவீடுகாட்சிமணல்வீடுகட்டுபிசியோடுக்கவசமோ,
எரிவீடெனச்சொல் இடுகாடுபோமு னெளியேன்மு
னேகிவருவாய், மருவீடுவுண்ணு முலைநாமதேவி வர
வேணு மென்றனருகே. அ

அரவண்டநஞ்ச மதுதீரவென்பு மருங்கைப்பிவ
ரவும், பெருநீரிலோலை யெதிரேறமாறன் பிணியான
வெப்பகலவும், திருவார்ந்தஞான வழகங்கறந்தசீர்கா
ழியற்குதவவே, வருசெல்வியண்ணு முலைநாமதேவி
வரவேணு மென்றனருகே. கூ

சுழியூடெமூங்கவழல்சோதிநீதி தாறைகண்டுவுன்னு
மறிவை, யிழைவாடுகின்றவெனைபாடுனைச்சொ லிடுவே
னெவைக்குமுறவாம், ஒழிவாடுமோன தனிஞானியா
னவுமையேதிணிலமிடறேன், வழிபாடுமுண்ணுமுலை
நாமதேவி வரவேணு மென்தனருகே. ய

அகிகத்துயர்க்குள் பகையேற்றுமை அசனத்தத
யன்றியிலையிப், பதிகத்தைநிற்சாரணபங்கயத்தில் பரி
வுற்றளிக்குமெனையாம், கதியெத்ததிச்சொல் கதி
த்தருமுத் தமியேபமைப்பெண்ணுமையே, மதிசத்தியு
ண்ணு முலைநாமதேவி வரவேணுமென்றனருகே. ()

உண்ணுமுலையம்மன்வருகைப்பதிகமுற்றிற்று.

திருவண்ணாமலை

அருணசலேஸ்வரர்பதிகம்.

காப்பு-வெண்பா.

ஆதி யயன்மா லடிமுடியைக் காண்பரிய
சோதி வளாகின்ற தூயனொளிர்
கற்றைச் சடைக்கணிந்த கண்ணுதலைப்போற்றவெங்க
ளொற்றைக் கொப்பன்துணைத்தா ளுண்டு.

ஆசிரியவிருத்தம்.

ஓதுமலை துல்லியவிபூதிமலைகைலைய னுறைந்த மலை
மந்திரமலைஉத்தமமெய்ஞ் ஞானியர் தபோதனர்கள்சூ
ழுமலைபோங்குமலையழியாமலைசோதிமலையிருகண்களி
க்குமலை மெய்யடியர் தொழுதருசோணமலையே துங்
கபத்திரி யமுனை கலைவாணி தீர்த்தமலி சுனையருகி
னொளிர்யாமலை, வேதமலைசித்திர விநோதமலையென்
னன்னையர், வேண்டுமலைகாண்டமலையே வினைதீர்க்கவ
ந்தமலை கனகாபிஷேகமலை வீறுமலை யேதுமலையே
ஆதிமலையீதுறைபாகியே யெனையா ளருணசலக்
க்கடவுளே அரகரமகேசனே பரமகுருவீசனே அண்
ணாமலைவாசனே க

காளத்திநாதராய்க் கழுகாசலத்தராய்க் காசிதனி
ல் விசுவேசராய்க கச்சியேகம்பராய் வேளூர்விநோத

ராய்க் கமலமலர் தனனிலுறைபுத், தேனுக்குமாலுக்குமெட்டாதசோதியாய்த் திருவொற்றியூர்த் தியாகராய்த்-தென மதுரையிற சொககராயக காழிதன்னிற் திருத்தோணி யப்பர்தாமாய், நாளச்சரோருகத் தடமேவுதென்றில்லை நடராயரராய்விரிஞ்ச-நகர்வழித துணலிங்க ராயத்திருச்செங்காட்டு நடபராயடியார்களை ஆளக்கடைக்கணருள் செயவிளங்கியவெங்க ளருணாசலக்கடவுளே-அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலைவாசனே ௨

பாணிச்செழுஞ்சடைப் பரமனேயுலகிலுறு பத்தர்கோடிகளேத்திடும்-பாதபங்கேருகாசங்கரசதாசிவாபாலநேத்ராசாம்பவா, பூணிற்பொலிர்தமா தேவிபங்காசர்ப்ப பூஷணாநீலகண்டா பூதநாதாதற்பரா சிற்பராசர்வ பூரணாசதுராரண சேணிற்பொலித்த பண்ணவர்கணெடுமாலயன் சிந்தனைசெய்தேவதேவா-திகழ்சிகர மேருகோ தண்டாவகண்டா சிதம்பராகருணாகரா, ஆணிப்பொன்னேநாயினேன் றன்னையாளுவா யருணாசலக்கடவுளே- அரகர மகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலை வாசனே. ௩

சூலமொடுமான்மழு கபாலமுங்கைக்கொண்ட துங்கமிகுசிவசங்கரா-சுற்றிவந் துன்கோயில் பத்தியுடனே தொழுது சொல்லுமொ ழியெல்லையைக்கேள், வாலிபந் தன்னிலே யொருநாலுமெய்திடா வறுமைவந்தெனை

வருத்த-வண்புவியிலொருசாண் வயிற்றினைவளர்க்கவு ... வாடினேன்தேடிவந்தேதன், சாலவஞ்சித் தெனைக் கைவிடினுநாயினேன்சாமியுனைவிடுவதில்லை தளாம லுன்பாத பதுமநிதிதந்திடத் தயைசெய்வ துன்பார மே, ஆலவிடமருவுமணி நீலகண்டத்தனே யருணாசல க்கடவுளே-அரகரமகேசனே பரமகுருவீசனே அணி யண்ணாமலைவாசனே. ௪

தேவர்துதிதேவராய் வாழ்விக்குமீசராய் செகதலக் கர்த்தவ்யமாய்த்-தெய்வீகமாமுசிதமைபோகராயனே சிந்தைதனொந்தினிதுவாடி, பாவுலகில்கொலைகளவு கட் கமாமாதிய வகுத்தவைப்பாதகங்கள்-பனத்தச்ச மில் லா தியற்றினேனேனுவுன்னை வந்தித்திடாதகுற் றமோ; கூவென்றசத்தமுன் செவிகொண்டுகேளாதகொடுமை மதானென்னையனே குழவியழுகுரல்கேட்ட தாய்போ லவாமிதனது குறைதவிர்த்தாளையனே, ஆவிக்குநீது ணையலாதுவே றில்லையென் னருணாசலக்கடவுளே- அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாம லைவாசனே.

மாணிக்கரப்பர் சுந்தரர் புநிதசப்பந்தர் மாதவத் தோர்தமக்கும் வரமேயளித்தசிவ போகவுண்ணாமுலை வல்லிதனிடப்பாகனே, காணிக்கை கொண்டிட்ட தி சையுளோர்நசையொடு கனிந்துபூசனைபுரிந்து-கவினு ற்றவிருகரஞ் சிரமிசைகுவித்தேத்து கத்தனேகைலை

யாசே, வீணுக்குதித்துவாழ் நாள்கழித்துப் புவியில் மெலிவிசாரக்கடலினில்-வீழ்ந்தலேந்திடுமென் தருப்ப வங்கற்றுத விதமென்னமோவையனே, ஆணிகரத் துவெண் முத்தமேயத்தனே அருணாசலக்கடவுளே அரகரமகேசனே பரமகுருவீசனே அணியண்ணாமலை வாசனே. ௬

நீயெனதுதெய்வமென் றுன்கோவில்வந்து நேய டுகொண்டாடிநன்-றுன்கோவில்வலம்வந்து நேயமொ டுகொண்டாடிநன்-நினைபோர்டுபணிடவர்க் கழிவிலாப் பதவியும் நிறைசெல்வமுங்கனதையும், தேயுசுமமிக்க வுண்டாயுளும் நூறுண்டு தெனபுண்டுவன்பு முண்டு திபானிக்கநினைவுமுண் டீகையுண்டுயர்கல்வி தெளிவு ண்டுஞானமுண்டு, வாயுண்டுகவிசொலக் கேட்கவுஞ செவியுண்டு வாழ்வுண்டுதாழ்விலேயே வல்லாண்மை யுண்டு மிகுநல்லோரிணக்கந் துபோற்றுதாழ்வுறு ஆ யிராரோக்கியமும் பெருகவு நள்வாவிசூழ் அருணாசல க்கடவுளே அரகரமகேசனே பரமகுருவீசனே அணி யண்ணாமலைவாசனே, ௭

காலுடன்கைகளு நடுக்குற்றிடாமுனங் கழநாக்கு ளறுமுன்னங்-கண்கள்பஞ்சடையுமுன் துன்பம்வந்தெ ய்துமுன் காலன்வருதணுகாமுனங், தோலுஞ்சுருங்கித் திரைந்துநரையொடு மூப்புதோன்றுமுன்ஙிருபல்மு தலாம்-தொல்வினைவராமுனம் பல்வரிசை வீழு முன்

றொனியிட்டுமனைவிமக்கள், மாலுத்தழாமுனமை பாலு ன்றனக்கு முன்வந்தெனைக்காப்ப தரிதோ-மரணத்தய ர்திடுங்கருணத்திலுன்றன் மலர்ப்பதமு வர்தருளுவா ய், ஆலதனதயமுதுசெயு மயலனே யாதியே அருணா சலக்கடவுளே-அரகரமகேசனே பரமகுருவீசனே அ ணியண்ணுமலைவாசனே. அ

வீணுயிவ் வவனியிலுதித்துவந் தபூனேர் விசாரத் திலுலென துளம வெந்துமிக நொந்துன்னை வந்தடுத் தேனென்ன விதமான பாதகங்கள், நாணுது செய்த கொடியேனெனினு மென்பிழையை நம்பனே நீபொ றுத்து-நலமெலாநதந்துன் னடிககமலமலர் தன்னைநாட வெனை யடிமைகொள்வாய், சேணுடர் போற்றுமிறை வாசங்கராமஹா தேவாத்ரிலோகாநாதா சித்தர்கின்னர ருட்கள் அரகரவெனச்சொலிச் சேவிக்கு மறைநாயகா ஆணுய்பெண்ணுயலிய தானவென்னையனே அருணச லக்கடவுளே-அரகரமகேசனே பரமகுருவீசனே அணி யண்ணுமலை வாசனே. கூ

இந்திரன் தீர்த்தமுடன் அக்கினித்தீர்த்தமும் யம தருமதீர்த்தமுதலாய்- இயனிருதிதீர்த்தமும் வருண தீர்த்தமு முக்கியமென்னுவாயுவுதீர்த்தமும், வின்ல த க்குபேரதீர்த்தமு மமலயேவுமீசான தீர்த்தமுமுவந்த மிளிர்முலைப்பால்தீர்த்த நளிதமிழ்பயந்தமுனி வேணு கோமுயர்தீர்த்தமிகவே, சர்தச்சரஸ்வதி தீர்த்தமுமிலக்

குமிழ் தாய்தீர்த்தமுங் கௌதமர்- தன்தீர்த்தமுஞ் சக்
கரத்தீர்த்தமுநந்தி துங்கதீர்த்தமும்பிரமமாம், அந்த
மலிதீர்த்தங்கள் விளங்கபுடைசூழ்துல வருணாசலக்க
டவுளே அரகரமகேசனே பரமகுருவீசனே அணிய
ண்ணாமலைவாசனே. ௰க

அருணாசலேஸ்வரர்பதிகம்-முற்றிற்று

உண்ணாமுலையம்மன் பதிகம்.

காப்பு-வெண்பா.

அண்ணாமலைநாதரார்ந்திடப்பக்கத் தமர்ந்த
உண்ணாமுலைப்பதிக மேவுதற்க—ஒண்ணான
அந்திநிறத் தானீன்ற வண்ணமெலனு மைந்துகரத்
தந்திமுகன் றாளே சரண்.

சந்தவிருத்தம்.

திருவாருங் கூடுதானிலாறுவீடுதினமேயிருந்து மு
டிவிற், பெருவீடுதன்னில் மணல்வீடுகட்டிப் பேயே
ன்பிழைக்கவசமோ, எரிகாடெனச்சொல் சுடுகாடுபோ
முன்னெளியேன் முன்வந்தருளுவாய், மருவார்ந்தவு
ண்ணாமுலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. க

விலைமாதர்தங்கள்நிலையேமெய்யென்று விரிவானவு
லகந்தனில, அலைவாய்த்துரும்புபோலேயுழன்ற வடி
யேனையாராளுவார்; கலைதேடிகாணா தொளிருமப்ரசி

த்திக் கனத்தோர்புகழுமண்ணா முலைநாமதேவி வர
ரவேணுமெந்தனருகே. உ

சீர்கொண்டவகிலந் தனில்வாழுமாந்தர் செய்கோடி
தப்பிதத்தை, ஏர்கொண்டஉன்றன் வாளாலறுத்து யி
ரட்சித்து முலகம்மைநீ, ஆர்கண்டுநின்சீட ருரைசெப்
பவல்லவ•ணதரட்சகிநீயலோ, வார்கொண்ட வுண்ணா
முலைநாமதேவி வரவேணுமெந்தனருகே. ௩

பிறைபோன்றநெற்றிப் பறைம்பணத்தி பரிபாலன
த்திபுகழ்சேர், நிறையோடுகி ற திருவேனின்சீரைநி
லையொடு செப்பவெளரார், குறைவாழ்வைநீக்கிப் பதமீ
ந்துரட்சிக் கொடிபோலிடைப்பெணமுதே, மறைதே
டு உண்ணாமுலைநாமதேவி வரவேணுமெந்தனருகே.()

சென்னிக்குழிந்தைப் புனலைத்தயுத்த சிவன்வாம
பாகந்தனில் மின்னேரெனச்சொன் மிக்கவேயிருக்கு
மெல்லியற்கணுமையே, என்னைபோலேழை யகிலத்தி
லில்லை யீடேறவைத்தாளுவாய் மன்னிக்கு உண்ணா
முலைநாமதேவி வரவேணுமெந்த னருகே. ரு

பந்தார்குஜத்தி பனிசோமுகத்தி பதுமாசனத்திமா
மி, நந்தார்கழுத்தி நாராயணத்தி நளினப்பதத்தினனி
சேர், சிந்தாகுலத்தை வந்தாதரித்து சீர்பெற்றிடச் சி
றுவன்முன், வந்தாள்கவுண்ணாமுலை நாமதேவிவரவே
ண்டுமென்தனருகே, சா

கொடிபோன்றிலடச்சி குறமாது மாமி குணமான பூஷணத்தோ, டிடியேறுபோன்ற மிடியால்மெலிந்த யேழைக்கிரங்குசத்தி, நடையாலனத்தைமெலியச் செய்விக்கு நாராயணன்சோதா், வடிவார்ந்த அண்ணாமுலை நாமதேவி வரவேணுமெந்தனருகே. எ

சற்றாகிலுன்றனுளமேயிரங்க யினிதாமசங்களேனே சித்தாந்தரூபி திவ்யபிரதாபி திருவார்ந்த தில்லையதனில், எத்தால்விளைந்த கதைபோலிருக்கு தென்னன் மழையிப்பூமியில் வற்றாத உண்ணாமுலைநாமதேவி வரவேண்டுமொர்தனருகே. அ

விரிவானபூமி தனில் வாழுமாநதர் வெகுதப்பிதங்கள்செயினும், அரிதானஞானமதுகொண்டோ வனைப்புரந்தாள்வை, பெருவாழ்வளித்துப் பிரியத்தொடென்னை பிரியாதிருக்கவிப்போ, வருசெல்வியுண்ணாமுலை நாமதேவி வரவேணுமெந்த னருகே. கூ

கதியிந்தவேளை மதியேயிலாத தமியேனைரட்சிப்பதற், கெதிராருமில்லை யுனையன்றிவேறு கௌமாரி வீரியிந்தப், பதிகத்தை நின்றன சரணத்திலொன்றன பரிவுற்று வைகுமெனையாள், மதிசத்தியுண்ணாமுலை நாமதேவி வரவேண்டுமென்றனருகே. ய

உண்ணாமுலையம்மன்பதிகம்,

முற்றிற்று.